# குருநாகல் மாநகர சபை

## குருநாகல் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 27 திகதி மாநகர சபையின் நகர பிதா உட்பட நகர மந்திரிமார்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குருநாகல் மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்காக மீளாய்வாண்டிற்கான பங்களிப்புத் தொகை ரூபா 1,801,558 தொகை எனினும் ஆண்டின் போது செலுத்தியிருந்த ரூபா 1,501,298 இற்கான தொகையினை மாத்திரம் ஆண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவுகள் ரூபா 300,260 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. அதே போல் இந்த நிதியத்திற்கு 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 51,570,385 இற்கான நிலுவைத் தொகை கடன்கொடுத்தோர்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெஹர வர்த்தக தொடர்கட்டிடம் ‘A’ பகுதி வாடகைக்கு கொடுத்ததன் மூலம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 275,000 இற்கான வாடகையினை, நிலுவை வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) பிரதேச அபிவிருத்தி வேலைகளுக்காக வேறு நிறுவனங்களில் இருந்து கிடைத்திருந்த ரூபா 2,844,905 இற்கான தொகை ஒன்று ஆண்டிற்கான மூலதன வருமானம் என

மூலதன வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு நாட்குறிப்பு இலக்கம் 2 இன் மூலம் அத் தொகை வருமானம் திருப்பிச் செலுத்துதல் என அக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டள்ளமையால் ஆண்டிற்கான மூலதன வருமானம் அத் தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச அபிவிருத்தி வேலைகளுக்காக செலுத்தியிருந்த ரூபா 4,710,946 இற்கான தொகை ஒன்று ஆண்டிற்கான செலவுகள் என மூலதனச் செலவுக் கணக்கு வரவு வைக்கப்பட்டு மீண்டும் நாட்குறிப்பு இலக்கம் 02 இன் மூலம் செலவுகளை திருப்பிச் செலுத்துதல் என அக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவுகள் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

-------------------------------------------

மாநகர சபையில் சேவையாற்றிய ஓய்வு பெற்ற ஊழியர்களுக்காக ஓய்வூதிய நிதியத்திற்கு மீளாய்வாண்டு இறுதி வரை செலுத்த வேண்டியிருந்த பங்களிப்புத் தொகை மீதி ரூபா 51,570,385 ஆகும்.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதியின் கீழ் 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகள் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளிடையே ரூபா 5,456,688 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------------

(அ) பெறவேண்டிய கணக்குகள்

---------------------------------------------

i. 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 110,933,832 ஆக காணப்பட்டது. அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 25 என ரூபா 27,649,700 தொகை ஒன்று 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் மீதிகளாகக் காணப்பட்டதுடன் ரூபா 43,635,169 இற்கான நிலுவை நீர் வருமானம் தொடர்பாக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. வருமானக் கடன்பட்டோர் மீதியாகிய ரூபா 102,182,017 தொகையில் மொத்தமாக நூற்றிற்கு 43 என ரூபா 43,635,169 தொகை நீர் வழங்கள் கடன்பட்டோர் ஆக காணப்பட்டதுடன் பொதுவாக நூற்றிற்கு 29 என ரூபா 29,573,450 உம் வீதவரி கடன்பட்டோராகும்.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 122,183,348 ஆகும். அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 11 என ரூபா 13,336,598 தொகை ஒன்று 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் மீதியாகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 9,655,176 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

02. நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 85,019,489 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 89,067,127 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,047,638 இற்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 15,367,541 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 88,272,731 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 12,114,299 இற்கான மிகை ஒன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 447,444,975 தொகையில் மொத்தம் நூற்றிற்கு 37 தொகை என ரூபா 167,697,054 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினால் அடங்கியுள்ளது.

(ஆ) மூலதன வருமானமாகிய ரூபா 15,367,541 இற்கான மொத்தமாக நூற்றிற்கு 57 ஆகிய ரூபா 8,747,168 முற்கொடுப்பனவுத் தொகை மற்றும் நன்கொடை பெறுவனவுகள் ஆகக் காணப்பட்டதுடன் மொத்தமாக நூற்றிற்கு 43 ஆகிய மீதி ரூபா 6,620,372 என்பன வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணம் ஆகும்.

(இ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ரூபா 362,425,455 இல் மொத்தமாக நூற்றிற்கு 50 என ரூபா 181,656,716 உம் சம்பளத்திற்கான செலவாகும். அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 66 ஆகிய ரூபா 120,589,479 தொகை ஒன்று சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்துடன் அப் பெறுமதி வருமானத் தலைப்பு 10-3-71 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மூலதனச் செலவு ஆகிய ரூபா 88,272,731 மொத்தப் பெறுமதி அடங்கியிருந்த நிலையான சொத்துக்கள் உரித்தாக்குவதற்காக சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் ஆகும். வேறு நிறுவன ஏற்பாடுகளின் மூலம்

மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளை இனங்கண்டு மூலதனச் செலவு என கணக்கீடு செய்திருக்கவில்லை.

2.3 வங்கிக் கணக்குகள்

----------------------------------

சபைகளின் 03 வங்கிக் கணக்குகள் தொடர்பாக 2015 மே மாதம் வரை 26 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 749,340 இற்கான இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் 14 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 57,274 இற்கான ஒரு வருடத்தை மிகைத்த காலம் முதல் காணப்படும் காசாக்கப்படாத பெறுவனவு மீதியொன்றும் காணப்பட்டது.

2.4 வருமான நிருவாகம்

-------------------------------

2.4.1 வீத வரி

--------------

மீளாய்வாண்டிற்காக 12 வட்டாரங்களின் கீழ் 14,022 வீத வரி அலகுகள் தொடர்பாக ரூபா 59,804,833 இற்கான வீதவரி வருமானம் ஒன்று பில்போடப்பட்டிருந்ததுடன் அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 49 என ரூபா 29,573,950 இற்கான நிலுவையொன்று காணப்பட்டது. அவற்றில் 14 அரச ஆதனங்கள் தொடர்பாக ரூபா 2,952,659 இற்கான நிலுவை ஒன்றும் காணப்பட்டது.

2.4.2 நீர் வருமானம்

------------------------

வருடாந்த நீர் பில்போடப்பட்டவை ரூபா 77,354,677 ஆக காணப்பட்டதுடன் அதன் கீழ் மீளாய்வாண்டு இறுதி வரை மொத்தமாக நூற்றிற்கு 56 என ரூபா 43,635,169 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது. அவற்றில் அக பில்போடல்கள் ரூபா 10,044,280 இற்கான பெறுமதியும் பாடசாலைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டிருந்த நீர் தொடர்பாக ரூபா 16,111,125 இற்கான பெறுமதியும் அடங்கியிருந்தது.

2.4.3 வாடகை

-----------------

2015 ஜூன் மாதம் வரை குருநாகல் நவீன கடைகள் தொடர்கட்டிடத்தில் 4 கடைகள் தொடர்பாக ரூபா 14,850 இற்கான வாடகை மற்றும் ரூபா 3,430 இற்கான சேவைக் கட்டண நிலுவை ஒன்று காணப்பட்டது. அதே போல் குருநாகல் நவீன பஸ் நிலைய 11 கடைகள் தொடர்பாக நிலுவையாக காணப்பட்ட கடை வாடகை ஒரே தடவையில் செலுத்தப்பட்ட பணம் (கீமணி) மற்றும் வட்டி ரூபா 1,457,047 தொகையாகும்.

03. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

-----------------------------------------------------

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குருநாகல் நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக பிரதான செயலாளரின் 2013 நவம்பர் 26 திகதிய இலக்கம் NWP/CS/P/220/2013 கொண்ட கடிதத்தின் பிரகாரம் சபையினால் ரூபா 4,203,925 இற்கான செலவு ஒன்று மேற்கொண்டு குறிப்பிட்ட பண்டங்களை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதும், அதற்கான ஏற்பாட்டுத் தொகை மீளாய்வாண்டு இறுதி வரையும் நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து பெற்றிருக்கவில்லை. அதே போல் இச் செயற்திட்டத்தின் செலவுகளை தீர்ப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து ரூபா 600,000 இற்கான ஏற்பாடுகளை சபைக்கு வழங்குவதற்கு இணங்கியிருந்த போதும் அதற்கான பில்பத்திரங்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கு இயலாமை காரணமாக அந்த பணத்தை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) நகர சபையின் காவலாளி மற்றும் தொழிலாளர் ஊழியர்களின் சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொள்ளல் கூடிய அளவில் நடைபெறுகின்றது எனவும் தொடர்புடைய பகுதிகளில் இருந்து அந்த விடுமுறைகள் கணக்குப் பகுதிக்கு அறிவிக்கப்படல் மற்றும் கணக்குப் பகுதியால் குறிப்பிட்ட அறவீடுகளுக்கு வழமையற்ற கால தாமதம் ஒன்று காணப்பட்டதெனவும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. அதே போல் சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கூடிய எண்ணிக்கையான தவணை அடிப்படையில் அறவீடு மேற்கொள்ளப்படுகின்றன என வெளிப்படுத்தப்பட்டது.

(இ) மீளாய்வாண்டு தொடர்பாக சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 539 ஆகக் காணப்பட்டதுடன் நிரந்தர பதவியணி 574 வும், 65 வெற்றிடங்களும் 100 மிகை ஊழியர்களும் காணப்பட்டன. அதற்கு மிகையாக மீளாய்வாண்டு இறுதி வரை அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் மாநகர சபை நிதியத்தில் இருந்து சம்பளம் பெறும் 79 ஊழியர்களும் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

(ஈ) சபையின் ஊழியர்கள் இருவர் தொடர்பாக செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியின் பங்களிப்புத் தொகையை சபையினால் செலுத்தப்படாமையால் நீதிமன்றத்தின் கட்டளை ஒன்றின் பிரகாரம் ஊழியர் பங்களிப்பு மற்றும் மிகை விதிப்பாக ரூபா 439,290 இற்கான மேலதிக செலவு ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுமையும்

-----------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ‘‘உதவிநிதி, பங்களிப்புத் தொகை மற்றும் மானியம்’’ செலவு விடயத்தின் கீழ் ரூபா 4,781,219 இற்கான செலவு ஒன்று மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்